## தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

-----------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களதினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 7.2 பந்தியின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களிற்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் சேர்க்கப்படும் வருமானம் நிதி செயலாற்றல் கூற்றிற்கு உட்படுத்தாது கட்டுநிதி இணக்கக் கூற்றினுள் செம்மையாக்க வேண்டிய போதும், ரூபா 3,309,284 ஆன அவ் வருமானங்கள் கட்டுநிதி இணக்கக் கூற்றினுள் செம்மையாக்கப்படாது நிதி செயலாற்றல் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கணக்குகள் தயாரிக்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சுற்றறிக்கையின் 7.10 பிரகாரம் ஏனைய தலைப்புகளிற்காக அறிக்கையிடும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 878,358 ஆன செலவினம் கட்டுநிதி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது முற்பனம் பீ கணக்கிற்குரிய கடன் மீதிகளை சரியாக்கும் போது தீர்த்த மீதிகளாகும். | அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 03 இல் குறிப்பிடப்படும் முறையில் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏனைய தலைப்புகளினால் முற்பண "பீ" கணக்கிற்கு செய்யப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 2,485,357 ஆன பெறுமதி கட்டுநிதி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களிலிடமிருந்து அறவிட வேண்டிய கணக்கு பொழிப்பு ஊடாக தீர்க்கப்பட்ட முற்பண பீ கணக்கிற்குரிய மீதி ரூபா 2,485,357 ஆகும். அது சரியாக குறிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 03 இல் குறிப்பிடப்படும் முறையில் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

1.6.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 290,600 பெறுமதியான சொத்துக்கள் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவின் கீழ் காட்டப்படாததுடன் அது ஆரம்ப மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | CIGAS மென்பொருளினால் தரவு முன்வைக்கும் முறையின் மீது இது ஏற்பட்டுள்ளது. 2021.12.31 திகதியன்று பௌதீக சொத்துக்கள் மற்றும் CIGAS மென்பொருள் பிரகாரம் காட்டப்படும் சொத்துக்கள் இடையில் வித்தியாசம் இல்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் கணக்கு வைக்க செயற்பட வேண்டும். |
| (ii) | ஆண்டினுள் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்கள் ரூபா 581,262 ஆக நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டினுள் பராதீனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | CIGAS வேலைத்திட்டத்திற்கு புதிதாக சொத்துக்கள் உட்படுத்தப்படும் போது சில உறுப்படிகள் இரண்டு முறை குறிப்பிட்டுள்ளது. அதன் பிகாரம் அக் குறிப்புகள் சரி செய்ய முடியுமாவது பராதீனத்தினூடாக மாத்திரம் என அரச கணக்குகள் திணைக்களத்தினால் சொல்லப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 581,262 ஆன இப் பெறுமதி பராதீனமாக | நிதிக்கூற்றுனூடாக உன்மையான தகவல்கள் வெளிப்படுத்த பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். |

காட்டப்படுகின்றது. இது CIGAS மென்பொரினால் தரவு முன்வைக்கும் முறையின் மீது ஏற்பட்டுள்ளது.

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வருமானமல்லாத பெறுவனவு பெறுமதி ரூபா 3,309,284 ஆனதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,284,284 ஆக ரூபா 25,000 இனால் குறைத்து காட்டப்பட்ட காரணத்தால் நடவடிக்கை செயற்பாடுகளுடன் கூடிய காசுப் பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | விடுபடல் தவறொன்று ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமானங்களை உட்படுத்த பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். |
| (ii) | ஏனைய செலவின தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 878,358 ஆன போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 853,358 ஆக ரூபா 25,000 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்த காரணத்தால் நடவடிக்கை செயற்பாட்டு களுக்காக செலவிட்ட காசுப் பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | விடுபடல் தவறொன்று ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகளில் சரியான பெறுமானங்களை உட்படுத்த பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். |

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர் முற்பண "பீ" கணக்கில் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் மற்றும் திறைசேரி புத்தகங்கள் பிரகாரம் ஆரம்ப மீதி வித்தியாசம் ரூபா 215,169 ஆனதுடன் கடந்த ஆண்டுகள் முதல் நிலவி வரும் இவ்வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல ஆண்டுகளாக நிலவி வரும் இவ்வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தகவல்களை கண்டறியும் கடினம் மீது தீர்ப்பது தாமதமாக உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்க்க செயற்பட வேண்டும. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடயம் இலக்க 301-1-1-1505 நன்கொடை மற்றும் பங்களிப்பு ரூபா 2,300,000 ஆன மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சி இருந்ததுடன் செலவின விடயம் இலக்க 301-1-1-1203 கீழ் ஏற்பாட்டுத் தொகையிலிருந்து 88 சதவீதமும் 301-1-1-2002 கீழ் ஏற்பாட்டு தொகையிலிருந்து 71 சதவீதமும் எஞ்சிக் காணப்பட்டன. | நன்கொடை மற்றும் பங்களிப்பு பணம் செலுத்துவதற்காக வங்கினூடாக விண்ணப்பம் சமர்ப்பிக்ககப்பட்ட போதும் அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக குறித்த பணத்தை விடுவிக்க முடியாதுள்ளதுடன் ஏற்பாடுகளை உரிய முறையில் பயன்படுத்த இயலாதிருந்தது. | ஏற்பாட்டு பணத்தை ஆண்டினுள் பயன்படுத்த பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி.94(1) பிரகாரம் ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புகளுக்கு கடப்படக் கூடாத போதும் செலவின விடயம் 301-1-1-1409 இற்காக ஏற்பாடு ரூபா 3,700,000 ஆனதுடன் செலவு ரூபா 3,693,047 ஆனதில் ரூபா 6,953 ஆன மீதியொன்று காணப்பட்டது. அம்மீதியை விஞ்சி ரூபா 182,230 ஆன பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தன. | முக்கிய செலவொன்றான துப்பரவேற்பாட்டு திரவ கொள்வனவிற்காக மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள ஏற்பட்டதால் மீதியை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட நேர்ந்தது. | ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புகளிற்கு கடப்படாதிருக்க பொறுப்பேற்க வேண்டும் . |
| (ஆ) | 2021 ஒக்டோபர் 26 திகதிய 2021/02 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 4.5 பந்தி பிரகாரம் குறைநிரப்பு கணக்கு பொழிப்பு மூலம் திறைசேரிக்கு அறிக்கையிடாத பொறுப்பொன்று முன்னைய ஆண்டின் செலவொன்றாக செலுத்த முடியாத போதும் நிதிக்கூற்றுக்களில் 03 செலவின விடயங்கள் தொடர்பாக காட்டியிருந்த பொறுப்புக்கள் ரூபா 216,791 இற்கு எதிராக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் 2021/02 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்ற செயற்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

செயல் நடவடிக்கை திட்டத்தில் முன்னேற்றத்தை குறிப்பிடும் அறிக்கையிற்கு அமைய 2021 திசெம்பர் 31 திகயன்று பின்வரும் கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வங்கி ஒழுங்கமைப்பு பிரிவு** | | |
| கூட்டுறவு வங்கி மற்றும் நிதிச் சேவை கூட்டுறவு சங்க ஒழுங்கமைப்பு மாகாண ஒருங்கிணைப்பு கூட்டங்கள் 04 நடாத்த திட்டமிட்டிருந்த போதும் மீளாய்வாண்டினுள் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காததுடன் செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொவிட் - 19 தொற்று நிலைமை 2021 வருட ஆரம்பம் முதல் நிலவியமை மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது மாகாண பிரயாண மட்டுப்படுத்தலை கடுமையாக்கியதன் மீது வங்கி ஒழுங்கமைப்பு பிரிவின் செயற்பாடுகளை திட்டமிட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியாது போனதாக. | எதிர்பாரா நிலைமையொன்று ஏற்படும் போது அதற்கு ஏற்ற வகையில் செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தி, அபாயம் முறைந்த காலப் பகுதியில் அல்லது நவீன தொழிநுட்ப முறையை பயன்படுத்தி குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) அபிவிருத்தி பிரிவு** | | |
| (i) அறிவு திறமை மனப்பாங்குகளால் பூரண ஊழியர் செயலணியொன்றை ஏற்படுத்தும் நோக்கில் பயிற்சி திட்டமொன்றை தயாரிக்க மற்றும் செயற்படுத்த திட்டமிட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அதனை செய்திருக்கவில்லை. | அவ்வாண்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமையுடன் ஊழியர் செயலணியை ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றுகூட்ட கடினமானதால் மாகாண மட்டத்தில் பயிற்சி வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கியதாக. | செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தும் போது அது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (ii) ‘‘அனைத்து கூட்டுறவுகளையும் தொடர்ந்து இலாபகரமாக நடாத்திச் செல்லல்’’ என்பதாக செயல் நடவடிக்கை திட்டத்தின் செயற்பாடொன்றை | செயல் நடவடிக்கை திட்டத்தில் அதன் செயற்பாடுகளின் பொறுப்புக்கள் குறித்த சங்கத்தின் பணிப்பாளர் | திணைக்களத்தால் மேற்கொள்ளும் பொறுப்புவாய்ந்த தரப்பினரை தெளிவாக |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கி இருந்த போதும் அதற்காக எவ்வித செயற்பாட்டையும் மேற்கொண்டிருக்கவில்லை. | சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மாகாண மட்டத்தில் தகவல்கள் ஒன்று திரட்டப்படுவதாக. | திட்டத்திற்கு உட்படுத்த வேண்டியதுடன் பின்னூட்டல் நடவடிக்கைகளை காலரீதியாக மேற்கொள்ள வேண்டும். |

**(இ) கணக்காய்வு பிரிவு**

| | | |
|---|---|---|
| (i) கணக்குகளை உரிய முறையில் சமர்ப்பிக்காத 12 கூட்டுறவு சங்கங்களிற்காக சட்ட நடவடிக்கை எடுக்க சட்டப் பிரிவிற்கு அனுப்ப திட்டமிட்டிருந்த போதும் அச் செயற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்குகளை சமர்ப்பிக்காத சங்கங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக சங்கங்களை அறிவூட்டியதாக. | திட்டமிட்ட செயற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். |
| (ii) இனங்கண்ட 03 செயலிழந்த சங்கங்களின் பதிவுவை இரத்துச் செய்யும் அறிவித்தலை பிரசுரித்தல் மற்றும் முடிவு கட்டுனர்களை நியமிக்க திட்டமிட்டிருந்த போதும் மீளாய்வாண்டினுள் அச் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | திட்டமிட்ட செயற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்திக்கு இணங்க அரச நிதித் திணைக்களத்தால் வெளியிட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்பித்திருக்கவில்லை. | தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்ற செயற்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 தொடர்பாக வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தில் 1.6, 1.7 மற்றும் 6.3 பிரிவுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அரச அமைச்சுக்கள்/திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 100,084 மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 47,353 ஆன கடன் மீதியை தீர்ப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. அக் கடன் மீதிகள் 23 முதல் 32 வருடங்கள் வரையான காலம் முதல் நிலுவை கடன் மீதிகளானது. | இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒருவருடைய மீதியை அறவிட உரிய அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும், இன்னுமொருவர் தொடர்பாக அமைச்சு மாறியதன் மீது கடன்தாரரை கண்டறிய கடினமானதாகவும், எஞ்சிய நபரின் மீதியை தீர்ப்பதற்கு 1998 ஆண்டு காசுப் புத்தகத்தை தேடிக்கொள்ளும் கடினம் காரணமாக தீர்ப்பது பிரச்சினைக்குரியதாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாகாண சபைக்கு இடமாறிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகள் தொடர்பாக குறித்த தகவல்கள் பொல்கொள்ள கூட்டுறவு பாடசாலையூடாக உறுதி செய்து அனுப்புமாறு அறிவித்து 2022.05.09 திகதி கடிதம் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கடன்களை அறவிட செயற்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை தாபன விதிக்கோவை 4.2.4 மற்றும் 4.2.5 பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 44,394 ஆன மீதியொன்று 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்பட்டது. | இது தொடர்பாக கம்பஹ பிரதேச செயலகம் மற்றும் அத்தனகல பிரதேச செயலகத்திலிருந்து உறுதிப்படுத்தல் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலும் விபரங்களை கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக்கோவை பிரகாரம் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 05 ஆண்டுகளை விஞ்சிய பணித்தடை செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 70,401 ஆன மீதியொன்றும், சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் | பணித்தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி தொடர்பாக தனிப்பட்ட முகவரிக்கு அறிவித்துள்ளதாகவும் சேவையை விட்டுச் சென்ற | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க பொறுப்பேற்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 48,720 ஆன கடன் மீதியொன்றும், காணப்பட்டதுடன் அக்கடன் மீதிகள் தொடர்பாக அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இற்கான வழிகாட்டி இலக்கம் 01 இன் (உ) மற்றும் (ஊ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உத்தியோகத்தர் ஒருவரின் பெயரில் கோவையொன்று இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**4.** **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஜுலை 17 ஆம் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் மேற்கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை. | 2021 செயலாற்றல் அறிக்கை ஊடாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண செயற்பட வேண்டும். |

**5.** **நல்லாளுகை**

**5.1** **உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பதவியில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வப்போது கோரிக்கை செய்துள்ள போதும் இதுவரை உத்தியோகத்தர் ஒருவரை பெற்று தரவில்லை. எதிர் காலத்தில் பதில் கடமை அடிப்படையில் உள்ளக கணக்காய்வு பதவிற்கு உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்படவுள்ளது. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை நிறுவ செயற்பட வேண்டும். |